# குற்றங்களைத் தடுப்பதற்குப் புதிய சட்டங்கள்

## ஜனாதிபதி அநுர தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 18

திட்டமிடப்பட்ட குற்றச்செயல்கள் மற்றும் போதைப்பொருள் அச்சுறுத்தலை ஒழிப்பதற்குத் தேவையான வசதிகளை வழங்கவும் புதிய சட்டங்களை தயாரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

மேல் மாகாண பொலிஸ் உயர் அதிகாரிகளுடன் இன்று ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இவ்வாறு கூறினார். 2

மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 04 செவ்வாய்க்கிழமை 18.03.2025 கதிர் 156

தமிழ்பேசும் மக்களின் குரலாக – பக்கம் சாரா செய்திகளுடன் வெளிவரும் “மாலைக்கதிர்” இன்று 5 ஆவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றது. எமக்கு ஒத்துழைப்பு வழங்கி வரும் வாசகர்கள், விளம்பரதாரர்கள், அன்பர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். உங்கள் ஆதரவை எமக்குத் தொடர்ந்தும் வழங்குங்கள்.

– நிர்வாகம்

# நாடாளுமன்றத்துக்கு அருகில் வேலையற்ற பட்டதாரிகள் 2ஆம் நாளாகவும் போராட்டம்

## பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிந்த எதிர்க்கட்சித் தலைவர்

கொழும்பு, மார்ச் 18

தொழில் வழங்குமாறு கோரி அரசை வலியுறுத்தி வேலையற்ற பட்டதாரிகள் இரண்டாவது நாளாகவும் இன்று நாடாளுமன்றத்துக்கு அருகிலுள்ள பொல்துவ சந்தியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களின் கோரிக்கைகள் குறித்து கேட்டறிவதற்காக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆர்ப்பாட்டம் நடந்த இடத்துக்கு இன்று காலை விஜயம் செய்தார்.

கடந்த தேர்தல் காலப் பிரிவில் வேலை வழங்குவதாக தற்போதைய அரசு வாக்குறுதியளித்தது. எனினும், இதுவரை குறித்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. இதனால் தாம் உட்பட 2





# இந்திய மீனவர்கள் மூவர் மீன்பிடிப் படகுடன் கைது!



யாழ்ப்பாணம், மார்ச் 18

இலங்கைக் கடற்பரப்பில் சட்டவிரோதமான முறையில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட இந்திய மீன்பிடிப் படகு ஒன்று வட கடலில் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது. 2

# காணாமல்போயுள்ள மீனவர்களை தேடும் நடவடிக்கை துரித கதியில்

யாழ்ப்பாணம், மார்ச் 18

கடற்றொழிலுக்குச் சென்ற நிலையில் காணாமல்போயுள்ள யாழ். குருநகர் பகுதியைச் சேர்ந்த இரண்டு மீனவர்களையும் தேடும் நடவடிக்கை துரிதகதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்று கடற்றொழில், நீரியல் மற்றும் 2

# கொழும்பில் இம்முறையும் பச்சைக்கொடி பறக்குமாம்

## தனிவழி சென்ற ஐ.தே.க. இப்படிக் கூறுகின்றது

கொழும்பு, மார்ச் 18

கொழும்பு மாநகர சபையில் இம்முறையும் பச்சைக்கொடி பறக்கும் என்று ஐக்கிய தேசியக் கட்சி நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

கொழும்பு மாநகர சபை உட்பட கொழும்பு மாவட்டத்தில் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்குரிய கட்டுப்பணத்தை ஐக்கிய தேசியக் கட்சி செலுத்தியுள்ளது.

கொழும்பு மாநகர சபைக்கு ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து போட்டியிடுவதற்குரிய முயற்சி கைகூடாத நிலையிலேயே தனித்துக் களமிறங்குவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி கட்டுப்பணம் செலுத்தியுள்ளது.



“கொழும்பு மாநகர சபையை இம்முறையும் ஐக்கிய தேசியக் கட்சி கைப்பற்றும். மேயர் வேட்பாளர் விரைவில் அறிவிக்கப்படுவார்.” - என்று ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

# சர்வதேச விசாரணைக்கு வலுச் சேர்க்கும் வகையில் பட்டலந்த அறிக்கை வெளியீடு

## மொட்டுக் கட்சி போர்க்கொடி

கொழும்பு, மார்ச் 18

ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத் தொடரில் இலங்கை விவகாரம் சம்பந்தமாக வெளியக விசாரணைப் பொறிமுறைக்கு வலுச் சேர்க்கும் வகையிலேயே பட்டலந்த விசாரணை ஆணைக்குழுவில் அறிக்கை பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளது என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி சுட்டிக்காட்டியுள்ளது. 2

## சர்வதேச விசாரணைக்கு .....

தமிழ்ப் பிரிவினைவாத டயஸ்போராக்கள் சூழ்ச்சியாகவே பல வருடங்களுக்குப் பிறகு தற்போது அறிக்கை நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது என்று முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

“ஜே.வி.பியின் தலைவர் ரோஹண விஜேவீர கொல்லப்பட்டமை தொடர்பில் நேரடி சாட்சியம் இருப்பதாக நபர் ஒருவர் கூறியுள்ளார். சந்திரிகா ஆட்சியில் தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸ ாநாயக்க முக்கிய அமைச்சராக இருந்தார். அப்போது பட்டலந்த அறிக்கை தொடர்பில் ஏன் பேசப்படவில்லை? அறிக்கை ஏன் வெளியிடப்படவில்லை?

மைத்திரிபால சிறிசேன ஆட்சிக் காலத்திலும் ஊழல் ஒழிப்புப் பிரிவில் அநுர முக்கிய வகிபாகத்தை வகித்தார். அப்போது ஏன் மேற்படி அறிக்கை எடுக்கப்படவில்லை?

அல்ஜெஷீரா ஊடக நேர்காணலில் புலிகளுக்குச் சார்பான பார்வையாளர்கள் சபையே இருந்தது. ரணிலை அழைத்து, பட்டலந்த அறிக்கை சபையில் சமர்ப்பிக்கப்படவில்லை என்பதை வெளிப்படுத்தி தற்போது அதனை நாடாளுமன்றத்தில் முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் வெளியகப் பொறிமுறைக்கான ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன. சாட்சிகள் திரட்டப்பட்டு வருகின்றன.

போருக்கு அரசியல் தலைமைத்துவம் வழங்கிய தலைவர்கள் மற்றும் படையினரை இலக்கு வைத்தே இந்தப் பொறிமுறை வகுக்கப்படுகின்றது.

இவ்வாறானதொரு பின்புலத்தில் பட்டலந்த அறிக்கையை வெளியிட்டு, இலங்கை மனித உரிமைகளை மீறிய நாடு என்பதைக் காண்பிப்பதற்குக் களம் அமைத்தக்கொடுக்கப்பட்டுள்ளது. இது காட்டிக்கொடுப்பாகும்.

மேற்படி அறிக்கையை வெளியிடுவதற்குப் பல சந்தர்ப்பங்கள் இருந்தும், இலங்கை தொடர்பில் வெளியகப் பொறிமுறைக்கு முயற்சிக்கப்படும் முக்கிய வேளையில் அறிக்கை வெளியிடப்படுவது சூழ்ச்சியாகும். இதனைக் கண்டிக்கின்றோம்.” - என்றார்.

## நாடாளுமன்றத்துக்கு.....

கிட்டத்தட்ட 40 ஆயிரம் வேலையற்ற பட்டதாரிகள் கைவிடப்பட்டுள்ளனர் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட வேலையற்ற பட்டதாரிகள் தெரிவித்தனர்.

“இதற்கு முன்னரும் பல தடவைகள் இந்தப் பிரச்சினையை நாடாளுமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்தேன். இருந்த போதும் அரசிடம் இருந்தும், பொறுப்பான தரப்பினரிடம் இருந்தும் இதற்கான எவ்வித பதிலும் கிடைக்கவில்லை.” - என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் மத்தியில் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

“பட்டதாரிகள் தொடர்பான பிரச்சினைக்குப் பதிலைப் பெற்றுத் தருமாறு அரசிடம் கோரிக்கை விடுக்கின்றேன். அரசு வழங்கும் பதிலைப் பார்ப்போம். இதற்கு என்ன பதில் சொல்வார்கள் என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம். தற்போதைய அரசின் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலை வழங்கப்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. தமது முதலாவது வரவு - செலவுத் திட்டத்தில் இந்த வேலையில்லாப் பிரச்சினைக்கு தீர்வை வழங்குவோம் என்றும் இந்த அரச தரப்பினர் பிரஸ்தாபித்திருந்தனர். ஆனால், இதுவரையில் இது தொடர்பில் தீர்வு காணப்படவில்லை.” - என்றும் எதிர்க்கட்சித் தலைவர் கூறினார்.

“வேலையில்லாப் பட்டதாரிகள் பக்கம் நான் முன்பும் இருந்தேன். இன்றும் இருக்கின்றேன். நாளையும் இருப்பேன். இந்தப் போராட்டத்தை அமைதியாகவும் ஜனநாயக ரீதியாகவும் முன்னெடுங்கள். இதற்கு எதிர்க்கட்சித் தலைவர் என்ற வகையில் தேவையான சகல ஆதரவையும் வழங்குவேன்.” - என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேலும் தெரிவித்தார்.

## குற்றங்களைத் .....

சட்டத்தின் ஆட்சியைப் பாதுகாப்பது பொலிஸ் திணைக்களத்தின் பொறுப்பு என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டாமல் இலங்கையில் ஒரு நேர்மையான சமூகத்தை உருவாக்க முடியாது என்றும் தெரிவித்தார்.

பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால, பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் பிரதி அமைச்சர் சட்டத்தரணி சுனில் வட்டகல, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ரவி செனவிரத்ன, பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய மற்றும் மேல் மாகாண பொலிஸ் பிரதானிகள் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

## காணாமல்போயுள்ள.....

கடல்வளங்கள் *அமைச்சின் ஊடகச் செயலாளர் தெரிவித்துள்ளார்.*

*மேற்படி மீனவர்கள் காணாமல்போயுள்ள விடயம் தொடர்பில் தமது கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டதையடுத்து கடற்படையினர் மற்றும் சம்பந்தப்பட்ட திணைக்களப் பிரதானிகளுடன் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் அவசர கலந்துரையாடலில் ஈடுபட்டார்.*

*மீனவர்கள் தொடர்பில் தேடுதல் உடன் ஆரம்பிக்குமாறு ஆலோசனை வழங்கினார். இதற்கமைய தேடுதல் இடம்பெற்று வருகின்றது என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சின் ஊடகச் செயலாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.*

*46 வயதுடைய விமலேந்திரன் ஞானராஜ், 54 வயதுடைய பூலோகதாசன் ஆகியோரே கடந்த 15 ஆம் திகதி ஊர்காவற்றுறையிலிருந்து கடற்றொழிலுக்குச் சென்ற நிலையில் காணாமல்போயுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.*

## இந்திய மீனவர்கள் .....

*நேற்று திங்கட்கிழமை இரவு யாழ். நெடுந்தீவுக்கு அப்பால், கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின்போது, சட்டவிரோதமான முறையில் இலங்கைக் கடற்பரப்புக்குள் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட இந்திய மீன்பிடிப் படகு ஒன்றுடன் 3 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டனர்.*

*கடல் எல்லையைத் தாண்டி உள்நாட்டுக் கடற்பரப்புக்குள் வெளிநாட்டு மீனவர்களால் மேற்கொள்ளப்படும் சட்டவிரோத மீன்பிடித்தலைத் தடுத்து, உள்நாட்டு மீனவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாப்பதற்காக இலங்கைக் கடற்படையினர் தொடர்ந்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.*

*இதன்போது கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காகக் காங்கேசன்துறை துறைமுகத்துக்கு அழைத்து வரப்பட்டு மயிலிட்டி கடல்வள பரிசோதகரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.*

SUHATHEHAM ATHULARSAALAI (PVT) LTD
சுகதேகம் ஆதுலர்சாலை (பீவீட) எல்டீடி
Neithal Beach city, Navatkuli, Jaffna
Company No- PV0031448

சித்த, ஆயுர்வேத, மேற்கத்ய இணைந்த மருத்துவ சேவை

Opening Hours - 9.00 am - 5.00 pm
Monday - Saturday

Treatment for Following Diseases
- Joint disorders சகல விதமான மூட்டுவாதங்கள்
- Paralysis பாரிசவாதம்
- Skin diseases தோல் நோய்கள்
- obesity உடற்பருமன்
- Gynecological problems - பெண்ணியல் நோய்கள்
- A norectal diseases மூல வருத்தம்
- Diabetic Mellitus நீரிழிவு
- Diabetic foot ulcers - நீரிழிவு புண்கள்
- Vericose vein Kidney stone சிறுநீரககல்
- Hypertension உயர்குருதியமுக்கம்
- cholesterol கொலஸ்திரோல்
- GGIT disorders சமிபாட்டுத் தொகுதியுடன் தொடர்பான நோய்கள்

இலவச மருத்துவ முகாம்
* போயா தினங்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை நடைபெறும்.
* இலவசமாக குருதியமுக்கம் நிமை, உயரம், உடற்திணிவுச்சுட்டி என்பவற்றை அளவிட முடியும்

Special Treatments
- Full body Therapy
- Head Massage
- Foot Massage -
- Herbal Medicated Bath
- Decoction Bath
- Shirod hara
- skin care therapy
- Nasya
- wellness treatment through yoga & counselling
- Leech Therapy

அனைத்து விதமான குழந்தைகளுக்கான மூலிகைத் தாவரங்கள், கோரோசனை மாத்திரைகள், கிரந்தி எண்ணை என்பனவனற்றை இங்கு பெற்றுக்கொள்ளலாம்

Other activities ஏனைய சேவைகள்
Nursery Garden -
Medicinal Plants (மூலிகை தாவரங்கள்)
Medicinal leach (லீச் அட்டை வளர்ப்பு)

Neithal Beach city
Amman Kovil Road,
Navatkuli Jafina

Contact No-0762942218

# உயர்நீதிமன்ற வழக்கு காரணமாக பட்டதாரிகளை ஆட்சேர்ப்பு செய்யமுடியவில்லை– ஹரிணி அமரசூரிய!

உயர்நீதிமன்ற வழக்கு காரணமாக பட்டதாரிகளை ஆட்சேர்ப்பு செய்யமுடியவில்லை என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

இன்றைய நாடாளுமன்ற அமர்வின் போது எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச பட்டதாரிகள் தொடர்பில் எழுப்பிய கேள்விக்கு பதில் அளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

தற்பொழுது நாங்கள் 10,000க்கு மேற்பட்ட வேலை வாய்ப்புகளை வழங்கி வெற்றிடங்களை நிரப்பி வருகின்றோம்.

எதிர்க்கட்சித் தலைவர்கள் பொறுப்பான முறையில் சரியான தகவல்களை வழங்க வேண்டும்.

ஆசிரியர் சேவைக்கு ஆட்சேர்ப்பதிலே இருக்கின்ற தடைதான் உயர் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டிருக்கின்ற வழக்கு. அந்த வழக்கு காரணமாக ஆட்சேர்ப்பு செய்ய முடியாதுள்ளது.

கல்வித்துறையில் 25,000க்கு இடைப்பட்ட வெற்றிடங்கள் காணப்படுகின்றன. இந்த வழக்கு காரணமாக ஆட்சேர்ப்பு செய்ய முடியாது இருக்கிறது.

ஆகவே அமைச்சரவையில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களுக்கு அமையவே நாம் ஆட்சேர்ப்பு செய்ய முடியும்.

அடுத்த வழக்கு தவணை ஏப்ரல் மாத ஆரம்ப பகுதியில் வருகிறது. சட்டமா அதிபர் அந்த விவரங்களை நீதிமன்றத்திற்கு சமர்ப்பிப்பார். உயர்நீதிமன்றம் எடுக்கின்ற தீர்மானத்திற்கு அமைவாக நாங்கள் செயற்படுவோம். எழுந்தமானதாக ஆட்சேர்ப்புகளை செய்யவில்லை.

உண்மையில் அப்படி செய்யப்பட்டால் அது பட்டதாரிகளுக்கான அவமதிப்பாக இருக்கும். எந்த பாடங்களுக்கு எந்த பாடசாலைகளுக்கு வெற்றிடங்கள் இருக்கின்றன, எந்த இடத்தில் அதை நிரப்ப வேண்டும் என்கின்ற முறையில்தான் நாங்கள் இந்த ஆட்சேர்ப்பை செய்வோம். என அவர் மேலும் தெரிவித்தார்.



# அதிகரிக்கப்படவுள்ள பால்மா விலை!

இறக்குமதி செய்யப்படும் 400 கிராம் பால் மா பொதியொன்றின் விலை 50 ரூபாவால் அதிகரிக்கும் என பால்மா இறக்குமதியாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

அதன்படி ஏப்ரல் மாதம் முதலாம் திகதிக்குள் விலையை 4.7 சதவீதத்தால் அதிகரிக்க முடிவு செய்துள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.



# சுகாதார நிபுணர்கள் சங்கத்தின் வேலை நிறுத்தம் நியாயமற்றது– அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ!

2025ஆம் ஆண்டின் வரவுசெலவுத் திட்டத்தில்துணை வைத்திய நிபுணர்களின் கொடுப்பனவுகள் குறைக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து இன்று முதல் சுகாதார நிபுணர்களின் கூட்டமைப்பு 24 மணி நேர அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

எனினும் சுகாதார நிபுணர்களின் சங்கத்தால் முன்னெடுக்கப்படும் இந்த வேலை நிறுத்தம் நியாயமற்றது என சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

இன்றைய நாடாளுமன்ற அமர்வில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

நியாயமான அடிப்படை சம்பள உயர்வு வழங்கப்பட்ட போதிலும் நோயாளிகளின் உயிரைப் பணயமாக வைத்துக்கொண்டு நடத்தப்படும் இந்தப் போராட்டம் நியாயமற்றது.

எனினும் இந்த நியாயமற்ற வேலை நிறுத்தத்தில் இணையாமல் தங்கள் கடமைகளைச்செய்யும் அனைத்து சுகாதார நிபுணர்களும் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் அமைச்சர் வலியுறுத்தினார்.

தமது தொழிலில் எதிர்கொள்ளும் உண்மையான பிரச்சினைகள் குறித்து விவாதிக்க எந்த நேரத்திலும் நேரத்தை வழங்க ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் தயாராக இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இலஞ்சம் பெற்ற பெண் அதிகாரி கைது!

குருநாகல் - பௌத்தலோக பகுதியில் இலஞ்சம் பெற்ற பெண் அதிகாரி ஒருவர் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்தபெண்வடமேல்மாகாணசபையின் மாகாண வருமான திணைக்களத்தில் பணிபுரியும் மதிப்பீட்டு அதிகாரி ஆவார்.

முறைப்பாட்டாளரின் பெயரில் பதிவு செய்யப்பட்ட அறுதி காணி தொடர்பான பத்திரத்திற்கு அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய முத்திரைத் தொகையை குறைப்பதற்காக 50,000 ரூபாய் இலஞ்சமாக பெற்ற குற்றச்சாட்டில் குறித்த பெண் அதிகாரி கைது செய்யப்பட்டுள்ளதாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித் துள்ளது.

# சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட 12 கோடி ரூபாவுக்கும் அதிக மதிப்புள்ள சிகரெட் தொகை!

இலங்கைக்கு சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட சிகரெட் தொகை, கொழும்பு துறைமுகவளாகத்தில் உள்ள ஒரு கிடங்கில் இருந்து சுங்க வருமான பணிக்குழு அதிகாரிகளால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதன் போது சுமார் 713,000 சிகரெட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த சிகரெட்டுகள், ஐக்கிய அரபு இராச்சியத்திலிருந்து பாதுக்க பிரதேசத்தில் உள்ள ஒரு நிறுவனத்திற்கு இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் பெட்டிகளுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டதாக சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கைப்பற்றப்பட்ட சிகரெட்டுகளின் மதிப்பு 124,019,554 ரூபாவாகும், இதனால் அரசாங்கத்திற்கு 107,985,621 ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளதாக சுங்கத் திணைக்களம் கூறியுள்ளது.



# விவசாயிகளுக்கான உர மானியப் பணம் திருடப்பட்டுள்ளதாக அமைச்சர் தகவல்!



விவசாயிகளுக்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்ட உர மானியப் பணம் கிடைக்கப் பெறவில்லை என்றும், அந்தப் பணம் திருடப்பட்டுள்ளதாகவும் விவசாய பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

இன்றைய நாடாளுமன்ற அமர்வில், நாடாளுமன்ற உறுப்பினர் சுசந்த குமார நவரத்னவினால் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதில் அளிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அனுராதபுர மாவட்டத்தில் மட்டும் 155 விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட உர மானியப் பணமான 2,934,310 ரூபாய் திருடப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் ஒரு பெண் அதிகாரி கைது செய்யப்பட்டுள்ளார்.

சில விவசாயிகளின் உர மானியப் பணம் மாயமாகியது தொடர்பாக நற்புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், இது தொடர்பிலான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் விவசாய பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்தார்.

# சுகாதார நிபுணர்களின் கூட்டமைப்பு வேலைநிறுத்தம்!

சுகாதார நிபுணர்களின் கூட்டமைப்பு 24 மணி நேர அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட தீர்மானித்துள்ளது.

2025ஆம் ஆண்டின் வரவுசெலவுத்திட்டத்தின் ஊடாக துணை வைத்திய நிபுணர்களின் கொடுப்பனவுகள் குறைக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து இந்த போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

தமது பிரச்சினை தொடர்பில், நிதியமைச்சின் அதிகாரிகளுடன் நேற்று (17) இடம்பெற்ற கலந்துரையாடல் தோல்வியடைந்ததன் காரணமாகவே இந்த வேலைநிறுத்தம் முன்னெடுக்கப்படுவதாக சுகாதார நிபுணர்கள் சங்கத்தின் இணை அழைப்பாளர் உபுல் ரோஹன தெரிவித்தார்.

இந்த வேலைநிறுத்தத்திற்கு துணை வைத்திய நிபுணர்களின் கூட்டு சபையைச் சேர்ந்த 7 தொழிற்சங்கங்களும் இடைக்கால வைத்திய சேவைகள் கூட்டு முன்னணியைச் சேர்ந்த 11 தொழிற்சங்கங்களும் ஆதரவு தெரிவித்துள்ளன.

எவ்வாறாயினும், இந்தப் வேலைநிறுத்தம் நியாயமற்றது என இணை சுகாதார நிபுணர்களின் கூட்டு அதிகார சபையின் இணை அழைப்பாளர் சலித் அமரதிவாகர தெரிவித்துள்ளார்.

இதேவேளை தபால் தொழிற்சங்கங்கள் நேற்று ஆரம்பித்த வேலைநிறுத்தம் இன்றும் தொடரவுள்ளதாக ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்க முன்னணி தெரிவித்துள்ளது.

நேற்று பிற்பகல் ஆரம்பிக்கப்பட்ட இந்த வேலைநிறுத்தம் காரணமாக தபால் நிலையங்களில் 10 இலட்சத்திற்கும் அதிகமான கடிதங்கள் மற்றும் பொதிகள் குவிந்துள்ளதாக அதன் இணை அழைப்பாளர் சிந்தக பண்டார குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், இந்த வேலைநிறுத்தம் வெற்றியளிக்கவில்லை என இலங்கை தபால் சேவை சங்கத்தின் தலைவர் ஜகத் மஹிந்த தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

## ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் தவிசாளர் இராஜினாமா!



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கர் ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் தவிசாளர் பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

தனது ராஜினாமா கடிதத்தை கட்சித் தலைவர் மற்றும் கட்சியின் பொதுச் செயலாளருக்கு அனுப்பி வைத்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

## யாழ். மாவட்ட தேர்தல் திணைக்களத்தில் இன்றும் கட்டுப்பணம் செலுத்திய அர்ச்சுனா

யாழ்ப்பாணம், மார்ச் 18

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா இன்றைய தினமும் யாழ். மாவட்ட தேர்தல் திணைக்களத்தில் கட்டுப்பணம் செலுத்தியுள்ளார்.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அர்ச்சுனா எம்.பி. தலைமையில் வடக்கு, கிழக்கில் சுயேச்சை அணி களமிறக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய யாழ். மாவட்டத்தில் யாழ். மாநகர சபை உள்ளிட்ட ஐந்து சபைகளுக்கு நேற்றைய தினம் கட்டுப்பணம் செலுத்தி இருந்த நிலையில் இன்றைய தினம் ஏனைய சபைகளுக்குக் கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளார்.

இதேபோன்று வடக்கு, கிழக்கில் உள்ள ஏனைய உள்ளூராட்சிசபைகளிலும் அர்ச்சுனா எம்.பி. தலைமையிலான சுயேச்சைச் குழு போட்டியிடவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

## வவுனியா வடக்கு பிரதேச சபைத் தேர்தலுக்கான வேட்புமனுவைத் தாக்கல் செய்த ‘சைக்கிள்’ கட்சி

வவுனியா, மார்ச் 18

நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வவுனியா வடக்கு பிரதேச சபையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னனி அதன் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் சைக்கிள் சின்னத்தில் போட்டியிட இன்று வேட்புமனுவைத் தாக்கல் செய்தது.

உள்ளூராட்சிசபைத்தேர்தலுக்கான வேட்புமனுக்கள் நேற்று திங்கட்கிழமை முதல் எதிர்வரும் வியாழக்கிழமை நண்பகல் வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

அந்தவகையில் வவுனியா மாவட்டத்தில் வவுனியா மாநகர சபை உட்பட 4 சபைகளில் போட்டியிடும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னனி முதல் கட்டமாக வவுனியா வடக்கு பிரதேச சபைக்கான வேட்புமனுவை இன்று தாக்கல் செய்தது.

இதனைக் கட்சியின் மாவட்ட அமைப்பாளர் எஸ்.



தவபாலன், வேட்பாளர்களான சஞ்சு, தமிழ்ச்செல்வன் உள்ளிட்டோர் தாக்கல் செய்தனர்.

## வேட்பாளர் தெரிவில் முரண்பாட்டையடுத்து தமிழரசின் முக்கிய செயற்பாட்டாளர் விலகல்

யாழ்ப்பாணம், மார்ச் 18

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வடமராட்சி கிழக்கு செயற்பாட்டாளரான பி.அலஸ்ரின் (றஜனி) கட்சியை விட்டு வெளியேறுவதாக அறிவித்துள்ளார்.

தனது உத்தியோகபூர்வ முகநூல் பக்கத்தில் இன்று வெளியிட்ட பதிவின் ஊடாக இந்த விடயத்தை அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், அவர் தனது தீர்மானத்தை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலாளரான எம்.ஏ. சுமந்திரனுக்கும் அவர் அறிவித்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அவருடைய முகநூல் பதிவில், “18.03.2025 இன்று நான் உயிரிலும் மேலாக நேசித்த இலங்கைத் தமிழரசுக் கட்சியை விட்டு முற்றுமுழுதாக வெளியேறுகின்றேன்” - என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வடமராட்சி கிழக்கு, முள்ளியான் வட்டாரத்தில் வேட்பாளரை நிறுத்துவது தொடர்பாக எழுந்த முரண்பாடே பி.அலஸ்ரின் கட்சியை விட்டு வெளியேறுவதற்கான காரணம் என்று அறியமுடிகின்றது.



## வவுனியாவில் 600 இற்கும் மேற்பட்ட நோயாளர்கள் சுகாதார தொழிற்சங்க நடவடிக்கையால் பாதிப்பு

வவுனியா, மார்ச் 18

சுகாதார தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக வவுனியாவில் 600 இற்கும் மேற்பட்ட நோயாளர்கள் பாதிப்படைந்துள்ளனர்.

நாடளாவிய ரீதியில் சுகாதார தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக மருந்தகங்கள், ஆய்வகங்கள், கதிரியக்க சேவைகள், பொதுச் சுகாதாரம் மற்றும் குடும்ப நல சுகாதாரம், கண் மருத்துவ நடவடிக்கைகளில் ஈடுபடும் சுகாதாரப் பகுதியினர் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

அந்தவகையில் வவுனியாவிலும் பணிப்பகிஷ்கரிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதன் காரணமாக வவுனியாவில் பொது வைத்தியசாலைக்கு ஹெப்பிட்டிகொல்லாவ, பதவியா, உட்பட தூர இடங்களில் இருந்து வரும் 600 இற்கும் மேற்பட்ட நோயாளர்கள் மருந்துகளைப் பெற்றுக்கொள்ள முடியாமல் திரும்பிச் செல்வதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

குறிப்பாக வவுனியா பொது வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவுக்கு 600 இற்கும் மேற்பட்ட நோயாளர்கள் உட்பட மொத்தமாக 1000 பேர் வரை நாளாந்தம் மருத்துவ தேவைக்காக வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# சுனிதா வில்லியம்ஸ்: விண்ணில் ஒளிரும் நட்சத்திரம்!



**விண்வெளியில் வெறும் 8 நாட்கள் மட்டுமே தங்கும் திட்டத்துடன் புறப்பட்டுச் சென்ற சுனிதா வில்லியம்ஸ் மற்றும் புட்ச் வில்மோர் ஆகியோருக்கு 9 மாதங்களுக்குப் பின் பூமிக்கு திரும்பும் பயணம் மகிழ்ச்சி தரக்கூடியதாக இருக்கும்.**

தற்போதிருக்கும் விண்வெளி வீரர்களில் ஸ்பேஸ் வாக் எனப்படும் விண்வெளி நடையில் அதிக அனுபவம் கொண்டவராக சுனிதா வில்லியம்ஸ் (9 முறை 62 மணி 6 நிமிடம் ) இருக்கிறார். விண்வெளி நடையில் அதிக அனுபவம் கொண்ட பெண்களில் இரண்டாவது இடத்தில் சுனிதா வில்லியம்ஸ் உள்ளார்.

“விண்வெளியில் இருந்து நாம் வாழும் இந்த பூமியை பார்க்கும் வாய்ப்பைப் பெற்றதற்காக நான் மிகவும் அதிர்ஷ்டசாலி என்று கருதுகிறேன்” - இது தனது விண்வெளி பயணங்கள் குறித்து சுனிதா வில்லியம்ஸ் தெரிவித்த வார்த்தைகள்.

தற்போது வெற்றிகரமாக மற்றுமொரு நீண்ட விண்வெளி பயணத்தை நிறைவு செய்து, பூமிக்கு திரும்பும் இவருக்கு உலகெங்கிலும் வாழ்த்துகளும், வரவேற்புகளும் குவிந்து வருகிறது.

**ஆனால் சுனிதா வில்லியம்ஸின் வாழ்க்கை எப்படி இருந்தது? அவரின் இந்திய பூர்வீகம் என்ன?**

சுனிதா பிறந்து வளர்ந்தது என அனைத்தும் ஓர் அமெரிக்கராக இருந்தாலும், அவரது தந்தை ஓர் இந்தியர். குஜராத்தின் மெஹ்சானா மாவட்டத்தில் உள்ள ஜுலாசன் கிராமம்தான் சுனிதாவின் தந்தை தீபக் பாண்ட்யா பிறந்து வளர்ந்த இடம். மருத்துவரான தீபக் பாண்டியா, அகமதாபாத்தில் மருத்துவப் படிப்பை முடித்தார்.

அண்ணன் அமெரிக்காவில் இருந்ததால் தீபக்கும் அங்கு சென்றார். அங்கு அவர் உர்சுலின் போன்னி என்ற பெண்ணை திருமணம் செய்துகொண்டார். இந்த தம்பதிக்கு ஜெய், தினா, சுனிதா என மூன்று குழந்தைகள் பிறந்தனர். இதில் அமெரிக்காவின் ஓஹாயோ மாகாணத்தில் 1965-ஆம் ஆண்டில் சுனிதா வில்லியம்ஸ் பிறந்தார்.

தந்தை தீபக் பாண்ட்யாவுடன் 2007 ஆம் ஆண்டு இந்தியா வந்திருந்தார் சுனிதா வில்லியம்ஸ்.

சுனிதாவின் தந்தை ஓர் இந்து, அவரது தாயார் ஒரு கத்தோலிக்கர் என்பதால், அவரது வீட்டில் அனைத்து மதங்களையும் மதிக்க கற்பிக்கப்பட்டது.

சுனிதாவின் தந்தை தீபக், ஞாயிற்றுக்கிழமைகளில் தேவாலயத்திற்கு பகவத் கீதையை தன்னுடன் எடுத்துச் செல்வார். மேலும் அவர் குழந்தைகளுக்கு ராமாயணம் மற்றும் மகாபாரதக் கதைகளை கற்பித்தார். இந்திய கலாச்சாரத்துடன் ஒரு தொடர்பை ஏற்படுத்த முயன்றார்.

சுனிதா வில்லியம்ஸின் குடும்பத்தில் உடற்பயிற்சிக்கு சிறப்பு கவனம் செலுத்தப்பட்டது. இதனால் அவரும் அவரது உடன் பிறந்தவர்களும் நீச்சல் கற்றுக்கொண்டனர்.

காலையில் இரண்டு மணி நேரமும், மாலையில் பள்ளி முடிந்த பிறகு இரண்டு மணி நேரமும் அவர்கள் நீச்சல் பயிற்சி செய்தனர்.

சுனிதாவுக்கு நீச்சல் மிகவும் பிடிக்கும். ஆறு வயதிலிருந்தே, அவர் நீச்சல் போட்டிகளில் போட்டியிட்டு பல பதக்கங்களை வென்றார். சுனிதா ஒரு நீச்சல் வீராங்கனையாக வருவார் என்று அனைவரும் நம்பினர். ஆனால் அவருக்கோ மருத்துவக் கல்வியில் ஆர்வம் இருந்தது.

சுனிதாவுக்கு விலங்குகள் மீது மிகுந்த அன்பு இருந்ததே அவருக்கு மருத்துவக் கல்வியில் ஆர்வம் மிகுந்ததற்கான காரணம். இதன் காரணமாக அவர் விலங்கு மருத்துவராக விரும்பினார்.

ஆனால் காலம், சுனிதாவை வேறு திசை நோக்கி செல்ல வைத்தது. சுனிதா ஒரு கால்நடை மருத்துவராக மாற விண்ணப்பித்திருந்தார். ஆனால் அவரால் அவர் விரும்பிய கல்லூரியில் சேர முடியவில்லை. இதன் விளைவாக, அவர் தனது சகோதரர் ஜெய்யின் ஆலோசனைபடி அமெரிக்க கடற்படை அகாடமியில் சேர்ந்தார்.

**கடற்படையில் தொடங்கிய சாகச வாழ்க்கை**

சுனிதா வில்லியம்ஸ் விண்வெளி வீரராக துணிகர பயணங்களை மேற்கொண்டிருந்தாலும், அவரது தொழில்முறை வாழ்க்கை கடற்படையில்தான் தொடங்கியது.

1983 ஆம் ஆண்டு சுனிதா வில்லியம்ஸ் அமெரிக்க கடற்படை அகாடமியில் இணைந்தார். இங்கு பயிற்சி பெற்று முடிந்த பிறகு அவர், 1989 ஆம் ஆண்டு கடற்படையில் பயிற்சி விமானியாக இணைந்தார். கடற்படைப் பணியின் போது 30 வகையான வானூர்திகளை இயக்கியதோடு, 2,770 மணி நேரம் வான்வெளியில் பறந்து அனுபவம் பெற்றுள்ளார் சுனிதா வில்லியம்ஸ்.

1993 ஆம் ஆண்டில், அவர் மேரிலாந்தில் உள்ள கடற்படை டெஸ்ட் பைலட் பள்ளியில் பயின்றார். அப்போது அவர் ஹூஸ்டனில் உள்ள ஜான்சன் விண்வெளி மையத்தை பார்வையிட்டார். அங்கு அவர் விண்வெளி வீரர் ஜான் யங்குடன் சேர்ந்து பணியாற்றினார். ஜான் யங், நிலவுக்கு சென்றிருந்தார். சுனிதா, அவரால் ஈர்க்கப்பட்டார். இதன்பின்பு நாசாவில் சேர விண்ணப்பித்தார்.

இந்த விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது. ஆனால் சுனிதா பின்வாங்கவில்லை. 1995 ஆம் ஆண்டில் புளோரிடா இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜியில் பொறியியல் மேலாண்மையில் முதுகலை பட்டம் பெற்றார். 1997 ஆம் ஆண்டில், அவர் மீண்டும் நாசாவுக்கு விண்ணப்பித்தார்.

இந்த முயற்சியில் நாசா அவரது விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்டது. அவர் ஒரு பயிற்சி விண்வெளி வீரராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

2006ம் ஆண்டு டிசம்பர் 9ம் தேதி முதன்முறையாக டிஸ்கவரி விண்கலத்தின் மூலம் விண்வெளிக்கு பயணப்பட்டார். Expedition 14 குழுவுடன் பணிகளைத் தொடர்ந்த அவர் Expedition 15 விண்கலத்தில் பணிகளை முடித்துக் கொண்டு 2007ம் ஆண்டு ஜூன் 22ம் தேதி பூமிக்கு திரும்பினார்.

2012ம் ஆண்டு ஜூலை 15ம் தேதி இரண்டாவது விண்வெளிப் பயணத்தை ரஷ்யாவின் சோயுஸ் டிஎம்ஏ-05 எம் விண்கலத்தின் மூலம் மேற்கொண்டார் சுனிதா வில்லியம்ஸ். இந்த பயணத்தை முடித்துக் கொண்டு அதே ஆண்டில் நவம்பர் 19ம் தேதி பூமிக்கு திரும்பினார்.

2015ம் ஆண்டில் வணிகரீதியான விண்வெளி பயணங்களுக்கான முதல் விண்வெளி வீரராக சுனிதா வில்லியம்ஸ் அறிவிக்கப்பட்டார். இந்த திட்டத்தின் தொடர்ச்சியாக 2024ஆம் ஆண்டு ஜூன் 5ம் தேதி போயிங் நிறுவனத்தின் ஸ்டார்லைனர் விண்கலம் மூலம் சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு பயணம் செய்தார்.

ஸ்டார் லைனர் விண்கலத்தின் த்ரஸ்டர்களில் ஏற்பட்ட கோளாறு காரணமாக இக்குழு இன்றி விண்கலம் பூமிக்கு திரும்பியது. இதனால் வெறும் 8 நாட்கள் மட்டுமே திட்டமிடப்பட்டிருந்த இந்த பயணம், 9 மாதங்களைக் கடந்திருக்கிறது. 59 வயதான சுனிதா வில்லியம்ஸ் தனது விண்வெளிப் பயணத்தில் அனுபவத்தில் பல சாதனைகளைப் படைத்துள்ளார். எதிர்பாராத விதமாக கூடுதல் நாட்கள் தங்க நேர்ந்த போதிலும், அவர் நல்ல உடல்நலத்துடன் இருப்பதாக நாசா கூறியுள்ளது.

கடற்படை அகாடமியில் இருந்தபோது, சுனிதாவுக்கு மைக்கேல் வில்லியம்ஸ் என்ற நண்பர் இருந்தார். ஆனால் இந்த அகாடமியில் படித்து முடித்த பிறகு அவர்கள் ஒருவருக்கொருவர் தொடர்பு கொள்ளவில்லை. பின்னர் அவர்கள் நண்பர் ஒருவரின் திருமணத்தில் மீண்டும் சந்தித்தனர். இதன் பிறகு அவர்களது உறவு மீண்டும் மலர்ந்தது. இது காதலாக மாறியது, இரண்டு ஆண்டுகள் டேட்டிங் செய்த பிறகு, 1987ஆம் ஆண்டில் இருவரும் திருமணம் செய்துகொண்டனர்.

சுனிதா வில்லியம்ஸ் உலகப் புகழ்பெற்ற விண்வெளி வீரராக அறியப்பட்ட போதிலும், தனது தனிப்பட்ட வாழ்க்கையை வெளிப்படுத்திக் கொள்ள எப்போதும் ஆர்வம் காட்டியது இல்லை.

கடந்த காலத்தில் சுனிதா விண்வெளிக்குச் செல்லும் போது சமோசா மற்றும் பகவத் கீதையை தன்னுடன் எடுத்துச் சென்றார். இது பல்வேறு விவாதங்களை எழுப்பியது.

இது குறித்து சுனிதா வில்லியம்ஸ் பேசுகையில், “இவை என மனதிற்கு மிகவும் நெருக்கமானவை. அது என் தந்தை எனக்குக் கொடுத்த பரிசு. நான் எல்லோரையும் போலவே விண்வெளியிலும் இருக்கிறேன் என்பதை எடுத்துக்காட்ட அது உதவுகின்றது”, என்றார்.

சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு கடந்த வருடம்



ஆய்வு பணிக்காக சுனிதா வில்லியம்ஸ் மற்றும் பேரி வில்மோர் ஆகியோர் சென்றிருந்தனர்.

ஒரு வார காலம் தங்கியிருந்து ஆய்வு பணிகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டு இருந்தது.

ஆனால் ஸ்டார்லைனர் விண்கலத்தில் தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டு இருவரும் பூமிக்கு திரும்ப முடியாத சூழல் ஏற்பட்டது.

கடந்த ஆண்டு செப்டம்பர் 7 ஆம் திகதி ஸ்டார்லைனர் விண்கலம், ஆட்கள் இன்றி வெறுமையாக பூமிக்கு திரும்பியது.

இந்த நிலையில் ஸ்பேஸ் எக்ஸ் மற்றும் நாசா நிறுவனம் இணைந்து கடந்த 15 ஆம் திகதி விண்கலம் ஒன்றை அனுப்பியது.

மார்ச் 17 ஆம் திகதி இரவு 10.45 அளவில் விண்கலம் சர்வதேச விண்வெளி நிலையத்திலிருந்து புறப்பட்டது .

இந்த விண்கலம் இன்று (18) மாலை 5.57 அளவில் அமெரிக்காவின் புளோரிடா கடல் பகுதிக்கு வந்து சேரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிகழ்ச்சியை நேரடி ஒளிபரப்பு செய்ய நாசா தீர்மானித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08. Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.03.2025 இல் வெளியிடப்பெற்றது.